# ஆகஸ்ட்– 27 – திங்கள்

## புனித மோனிக்கம்மாள்

## “எது சிறந்தது” மத்23:17

### முதல் வாசகம் : 2தெசலோனிக்கேயர் 1:1-5, 11–12

நம் தந்தையாகிய கடவுளுக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் உரிய தெசலோனிக்க திருச்சபைக்குப் பவுலும் சில்வானும் திமொத்தேயுவும் எழுதுவது. நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக!சகோதர சகோதரிகளே! உங்கள் பொருட்டுக் கடவுளுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ஆம், அவ்வாறு செய்வது தகுதியே. ஏனெனில் நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கை ஓங்கி வளருகின்றது நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் செலுத்தும் அன்பு பெருகி வழிகிறது.ஆகவேதான் நாங்கள் கடவுளின் சபைகளில் உங்களைக் குறித்துப் பெருமையாகப் பேசி வருகிறோம் உங்கள் துன்பங்களுக்கிடையே நீங்கள் காட்டிய சகிப்புத்தன்மையையும் இன்னல்களுக்கு இடையே நீங்கள் கொண்டிருந்த மனவுறுதியையும் நம்பிக்கையையும் முன்னிட்டுப் பெருமைப்படுகிறோம். இவை, கடவுளின் தீர்ப்பு நீதியானது என்பதற்கு அறிகுறியாக அமைகின்றன. இவையனைத்தின் விளைவாக நீங்கள் இறையாட்சிக்குத் தகுதியுள்ளவர்களாவீர்கள். இந்த ஆட்சிக்காகவே நீங்கள் துன்புறுகிறீர்கள்.இதற்காகத்தான் நாங்கள் உங்களுக்காக என்றும் இறைவனிடம் வேண்டுகிறோம். நம் கடவுள் தாம் விடுத்த அழைப்புக்கு உங்களைத் தகுதியுள்ளவராக்குவாராக! உங்கள் நல்லெண்ணம் ஒவ்வொன்றையும், நம்பிக்கையால் தூண்டப்படும் ஒவ்வொரு செயலையும் தம் வல்லமையால் நிறைவுறச் செய்வாராக! இவ்வாறு நம் கடவுளும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் அளிக்கும் அருளுக்கேற்ப, உங்களால் நம் ஆண்டவராகிய இயேசுவின் பெயருக்கும் அவரால் உங்களுக்கும் மேன்மை உண்டாகுக!

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் வியத்தகு செயல்களை
அறிவியுங்கள்

### நற்செய்தி : மத்தேயு 23: 13 – 22

அக்காலத்தில் இயேசு கூறியதாவது : ”வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக்கேடு!. மக்கள் நுழையாதவாறு அவர்கள் முன்பாக விண்ணக வாயிலை அடைத்துவிடுகிறீர்கள் நீங்கள் நுழைவதில்லை, நுழைவோரையும் விடுவதில்லை. ”வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஒருவரையாவது உங்கள் சமயத்தில் சேர்ப்பதற்கு, நாடு என்றும் கடல் என்றும் பாராது சுற்றி அலைகின்றீர்கள் அவ்வாறு சேர்த்தபின் அவரை உங்களைவிட இருமடங்கு நரகத்தண்டனைக்கு ஆளாக்குகிறீர்கள்.”குருட்டு வழிகாட்டிகளே, ஐயோ! உங்களுக்குக்கேடு! யாராவது திருக்கோவிலின்மீது ஆணையிட்டால் ஒன்றுமில்லை. ஆனால் அவர் கோவிலின் பொன்மீது ஆணையிட்டால் அதை நிறைவேற்றக் கடமைப்பட்டவர் என்கிறீர்கள்.குருட்டுமடையரே! எதுசிறந்தது? பொன்னா? பொன்னைத் தூயதாக்கும் திருக்கோவிலா?யாராவது பலிபீடத்தின்மீது ஆணையிட்டால் ஒன்றுமில்லை ஆனால் அவர் அதில் படைக்கப்பட்ட காணிக்கையின்மீது ஆணையிட்டால் அதை நிறைவேற்றக் கடமைப்பட்டவர் என்கிறீர்கள்.குருடரே! எது சிறந்தது? காணிக்கையா? காணிக்கையைத் தூயதாக்கும் பலிபீடமா?. எனவே பலிபீடத்தின்மீது ஆணையிடுகிறவர் அதன்மீதும் அதன்மேலுள்ள அனைத்தின்மீதும் ஆணையிடுகிறார். திருக்கோவிலின்மீது ஆணையிடுகிறவர் அதன்மீதும் அதில் குடிகொண்டிருக்கிறவர்மீதும் ஆணையிடுகிறார்.வானத்தின் மீது ஆணையிடுகிறவர் கடவுளின் அரியணைமீதும் அதில் வீற்றிருக்கிற கடவுள்மீதும் ஆணையிடுகிறார்” என்றார்.

**தியானம் :** கடவுளைப் பற்றி அறிந்தவர்கள்தான், கடவுளைத் தெரிந்தவர்கள்தான் கடவுளுக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கின்றார்கள். ஒரு பழமொழி உண்டு ‘கோவில் பூனை சாமிக்கு அஞ்சாது’ என்று. இதையே பவுலடியார் தன்னுடைய மொழியில் இவ்வாறு கூறுகின்றார், “அவர்கள் கடவுளை அறிந்திருந்தும் கடவுளுக்குரிய மாட்சியை அவருக்கு அளிக்கவில்லை, நன்றி செலுத்தவுமில்லை அதற்கு மாறாக அவர்கள் எண்ணங்கள் பயனற்றவையாயின. உணர்வற்ற அவர்கள் உள்ளம் இருண்டு போயிற்று” (உரோ.1:21). கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ராயேல் மக்கள்தான் கடவுளுக்கு எதிராக முணுமுணுத்தார்கள். கடவுளின் கோயிலில் பணி செய்யும் குருக்களும், மறைநூல் அறிஞர்களும்தான் இயேசுவை சிலுவையில் அறைய திட்டமிட்டார்கள். இயேசுவால் தேர்ந்து கொள்ளப்பட்ட சீடர்கள்தான் இயேசுவைக் காட்டிக் கொடுத்தார்கள், மறுதலித்தார்கள், இயேசுவை விட்டு ஓடினார்கள். இது அன்று நடந்த நிகழ்வுமட்டுமல்ல இன்றும் நம்மத்தியில் நடந்தேறும் எதார்த்த உண்மை. கடவுளின் அன்பு நம்மீது அபரிதவிதமாக பொழியப்பட்ட போதும் நம்முடைய பாவநாட்டங்கள் நம்மை கடவுளிடமிருந்தும், அவருடைய இரக்கத்தைவிட்டும் பிரித்துவிடுகின்றது. கடவுளுடைய கிருபையை, அன்பை, மன்னிப்பை மனிதர்கள் மறக்கும்போது அவர்ள் அவர்களுக்கென ஒரு அரசைக் கட்டிக்கொள்கிறார்கள். இதுவே தேவனுடைய இதயத்தை மிகவும் காயப்படுத்துவதாக அமைகின்றது எனவேதான் இன்றைய நற்செய்தி வாசகத்தில் கடுமையான வார்த்தைகளால் இயேசு மறைநூல் அறிஞர்களை கண்டிக்கின்றார். கடவுளின் இறையரசை கட்ட வேண்டியவர்கள் தங்களுக்கென ஒரு அரசை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறார்கள். பணம், பதவி, உலக ஆசைகள், மோகம், அங்கீகாரங்கள் இவைகள் நமது கண்களை மறைக்கும் போது, இயேசுவுக்கு விருப்பமில்லாத காரியங்களை இயேசுவின் பெயரிலேயே செய்ய நாம் முற்படுகின்றோம். கடவுள் விரும்பாத ஆடம்பர காணிக்கைகள், ஆலய நடைமுறைகள், அலங்காரங்கள், மனிதர்களை முன்னிலைப்படுத்தி செய்யப்படும் வழிபாட்டு முறைகள் என்று கடவுளுக்கு எதிரான காரியங்களை அறிந்தும் அறியாமலும் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். ஆலயம், வழிபாடு என்பது கடவுளை முன்னிலைப்படுத்துகின்ற, கடவுள் அனுபவம் பெறுகின்ற இடமே தவிர தனிமனிதர்களுக்கோ, அர்த்தமற்ற ஆடம்பரங்களுக்கோ முன்னுரிமை தருகின்ற இடம் அல்ல. இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இல்லையென்றால் இயேசுவின் இதயத்தை நோகச் செய்யும் மறைநூல் அறிஞர் கூட்டத்தில் நாமும் ஒரு உறுப்பினர்களாக் மாறிப்போகிறோம் என்பதை உணர்வோம்! எனவே எல்லாம் வல்ல இறைவனின் அதிமிக மகிமைக்காக நம்மை இழப்போம், இறைவனை மகிமைப்படுத்துவோம்.